**செய்தி வெளியீடு எண்: 091** **நாள்: 04.02.2019**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (4.2.2019) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ஆகிய துறைகளால் தயாரிக்கப்பட்ட ‘‘தமிழ்நாடு ஒருங்கிணைக்கப்பட்ட வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள், 2019’’ புத்தகத்தை வெளியிட, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

கட்டடம் மற்றும் மனைப்பிரிவு விதிகளானது, மனைப்பிரிவுகளை நெறிமுறைப்படுத்தவும், கட்டடங்களின் அமைப்பு, உயரம், கட்டுமான பரப்பு, வடிவமைப்பு உள்ளிட்ட கட்டுமானம் தொடர்பான அனைத்து அம்சங்களையும் ஒழுங்குபடுத்தி, முறையான திட்டமிட்ட இருப்பிடங்கள் அமைவதற்கு உதவுகின்றன. தற்போது தமிழ்நாட்டில், மனைப்பிரிவு மற்றும் கட்டடத்திற்கு தேவையான அனுமதி பெறுவதற்கான விதிகள், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971, சென்னை மாநகராட்சி சட்டம் 1919, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, தமிழ்நாடு ஊராட்சி சட்டம் 1994 மற்றும் பிற மாநகராட்சிகளுக்கான சட்டங்களில் தனித்தனியாக உள்ளன. இந்த விதிகளை எல்லாம் ஒருங்கிணைத்து ஒரே தொகுப்பாக மாற்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு முடிவெடுத்து, அதன்படி, இப்புதிய தமிழ்நாடு ஒருங்கிணைக்கப்பட்ட வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள், 2019 உருவாக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் புதிய நகரமைப்பு செயல் திட்டம் 2016 (New Urban Agenda 2016), மத்திய அரசின் மாதிரி கட்டட விதிகள் (Model Building Bye-Laws), தேசிய கட்டட வழிமுறைகள் (National Building Code, 2016), தேசிய நகர்ப்புற போக்குவரத்து சார்ந்த வளர்ச்சிக் கொள்கை (National Urban Transit Oriented Policy) மற்றும் பிற மாநிலங்களில் உள்ள விதிகள் ஆகியவற்றின் சிறப்பு அம்சங்களை கருத்தில் கொண்டு ‘‘தமிழ்நாடு ஒருங்கிணைக்கப்பட்ட வளர்ச்சி மற்றும்

கட்டட விதிகள், 2019'' உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த விதிகள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்களையும் கேட்டறிந்து உருவாக்கப்பட்டுள்ளது.

இப்புதிய விதிகளின் மூலம், மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளில் ஒன்றான வீட்டுவசதியை அனைவரும் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கில், வீடு கட்டுவதற்காக அனுமதிக்கப்படும் தளப்பரப்பளவு உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், பக்க இடைவெளிகள் குறைக்கப்பட்டு, கட்டடத்தின் உயரமும், தளங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், ஏழை எளிய மக்களுக்கும் குறைந்த விலையில் வீடுகள் கிடைத்திட வாய்ப்புகள் ஏற்படும். அதேநேரத்தில், கட்டட பாதுகாப்பை உறுதி செய்யவும், விதிமீறல்களை ஆரம்பகட்டத்திலேயே கண்டறிந்து அவைகளை தவிர்க்கும் வகையிலும் இந்த பொது விதிகள் வகுக்கப்பட்டுள்ளன.

மேலும், இப்புதிய விதிகளின்படி விண்ணப்பிக்கும் முறைகள் மற்றும் விண்ணப்பங்களை பரிசீலிக்கும் முறைகள் எளிமையாக்கப்பட்டு, விரைவில் கட்டட அனுமதி அளிக்கும் வகையில் விதிகள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்விதிகள் நகர் மற்றும் குடியிருப்பு பகுதிகளை திட்டமிட்டு அமைத்திட வழிவகை செய்யும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் திரு.பி.கே. வைரமுத்து, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு.ச.கிருஷ்ணன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு.கா. பாஸ்கரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 4.2.2019**